# தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண்.8560/அ6/2024 நாள்– 04 .09.2024**

பொருள் –பள்ளிக் கல்வி –சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகம் – அனைத்து வகை பள்ளிகளில் ஏற்படும் பாலியல் தொடர்பான குற்றங்கள் தடுக்கவும் – புகார் தெரிவிக்கவும் துறைவாரியாக உள்ளக புகார் குழு ( Internal Complaints Committee – ICC ) அமைத்தல் – அதன் விவரம் தெரிவிக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை –1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் கூட்ட அறிவுரை நாள்.02.09.2024

2)தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலரின் கடிதம், ந,கஎண்.490/அ2/2017 நாள்.23.11.2023

3) Protection of Children from Sexual Offences Act – 2012

4)பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும் சட்டம் – 2013 (ம) திருத்தப்பட்ட சட்டம் –2019

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் ஏற்படும் பாலியல் தொடர்பான குற்றங்களை தடுக்கவும், பள்ளிகளில் பயிலும் மாணவிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையில் இருந்து பாதுகாத்திட Protection of Children from Sexual Offences Act – 2012 மற்றும் பாதுகாக்கும் சட்டம் 2013 சட்டத்தினை மாநில அளவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் படி அனைத்து வகை பள்ளிகளிலும் **உள்ளக புகார் குழு ( Internal Complaints Committee – ICC )** கட்டாயம் அமைத்திட வேண்டும். தங்கள் பள்ளிகளில் பாலியல் தொடர்பான குற்றங்களை தடுக்கவும், புகார் தெரிவிக்கவும், விசாரணை மேற்கொள்ளவும் தங்கள் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் உள்ளக புகார் குழுவானது கீழ்க்கண்ட விவரப்படி உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அதன் விவரத்தினை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து தங்கள் பள்ளிகள் சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலத்தில் 05.09.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் இரண்டு பிரதிகளில் ஒப்படைத்திடுமாறும், பெறப்பட்ட படிவத்தினை எண்ணிக்கை வாரியாக இவ்வலுவலகத்துக்கு 06.09.2024 அன்று மதியம் 12.00 க்குள் நேரிடையாக அ6 பிரிவிடம் ஒப்படைக்குமாறு மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

Scanned with OKEN Scanner

பார்வையில் காணும் கடிதத்தின் படி குழு உறுப்பினர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்ந்தெடுத்து அமைத்திட அறிவுறுத்தப்படுகிறது

1) குழுத் தலைவர் கட்டாயமாக பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். (பெண் தலைமை ஆசிரியர் / மூத்த பெண் ஆசிரியர்)

2) இரண்டாவது மற்றும் மூன்றாவது உறுப்பினர்கள் பள்ளியில் உள்ள பெண் / ஆண் ஆசிரியர்கள் இடம் பெற வேண்டும்

3) நான்காவது உறுப்பினர் Doctor / Advocate/ NGO Members இவர்களில் ஒருவர் இடம்பெற வேண்டும்

4) உறுப்பினர்களில் 50% குறைவில்லாமல் பெண் உறுப்பினர்கள் கட்டாயம் இடம் பெற வேண்டும்.

இணைப்பு – படிவம்

04.09.2024

முதன்மைக் கல்வி அலுவலர்

தஞ்சாவூர்.

4/9/24

பெறுநர்– 1) அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக).

2) மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை),தஞ்சாவூர்/கும்பகோணம்

3) மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி) ,தஞ்சாவூர் / பட்டுக்கோட்டை.

4) மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளி) ,தஞ்சாவூர்.

நகல்– தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner